ISSN:2582-9599

# தமிழ் படித்தல் திறன் மேம்பாட்டிற்கான செயல்பாட்டு உத்திகள்

**ச.ம.மாசிலாமணி,எம்.ஏ.,எம்;.பில்.,பி.எட்.,**

**ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி, சுப்பிரமணியபுரம்,**

**திருத்தணி - 631 209. smmasilamani@gmail.com**

13

**ஆய்வு நோக்கம்**

தமிழ் மொழிப் பாடத்தில் கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகிய நான்கு அடிப்படைத் திறன்கள் அமைந்துள்ளன. இதில் மூன்றாவதாக இடம்பெற்றுள்ள படித்தல் என்னும் திறன் தொடக்கநிலை மாணவர்களிடம் வளர்ப்பதற்கான வழிமுறைகளையும், கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டு உத்திகளையும் ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழ்மொழி படத்தில் இடம்பெற்றுள்ள நான்கு அடிப்படைத் திறன்களில் படித்தல் என்னும் திறனை தொடக்கநிலை மாணவர்களிடத்தில் வளர்ப்பதற்கான கூறுகளையும், கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டு உத்திகளையும் ஆராயப்பட்டுள்ளன. அதாவது தமிழ் எழுத்துகளை அடையாளம் காணுதல், தமிழ் எழுத்துருக்களை சேர்த்துப் படித்தல், வரிவடிவத்திற்கு ஏற்ப ஒலி வடிவத்தை அறிதல், குறில் - நெடில் வேறுபாட்டை அறிந்து படித்தல், மிகப்பெரிய சொற்களை சேர்த்தும் பிரித்தும் படித்தல் என்னும் ஐந்து பெருந்தலைப்புகளில் தலைப்புகளில் முறையே 4, 5, 4, 2, 2 என ஆகமொத்தம் 17 கற்றல் - கற்பித்தல் செயல்பாட்டு உத்திகள் ஆராய்ந்து விளக்கப்பட்டுள்ளன.

**முன்னுரை**

குழந்தைகளின் பல்வேறு திறமைகள் வளர்வதற்கு வலிமையான சக்தியாகத் திகழ்வது தாய்மொழி ஆகும். குழந்தைகளின் ஆர்வம், திறமைகள், மனப்பான்மைகள் மற்றும் வாழ்க்கை மதிப்புகள் ஆகியவற்றை உருவாக்கவும், ஆளுமை வளர்ச்சிக்கும் தாய்மொழி இன்றியமையாதாக விளங்குகின்றது. மொழிப் பாடத்;திறன்களான கேட்டல், பேசுதல், படித்தல் மற்றும் எழுதுதல் ஆகிய நான்கு திறன்களுள் கேட்டலும், படித்தலும் கொள்திறன்களாகவும், மீதுயர்ந்த திறன்களாகவும் கருதப்படுகின்றன. எனவேதான் **“ஓதுவது ஒழியேல்”**[1] என ஔவையாரும், **“காலை எழுந்தவுடன் படிப்பு”2** எனப் பாரதியாரும் படித்தலின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்துள்ளனர். மொழித் திறன்களுள் சிறப்பானதாகக் கருதப்படும் படித்தல் திறன் வளர்ப்பதற்கான சாத்தியக் கூறுகளையும், உத்திகளையும் ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

**படித்தல் வரையறை**

வரி வடிவத்தில் உள்ளதைக் கண் பார்க்க, ஒலி வடிவமாக வாய் ஒலிக்க, மனம் அதன் பொருளை உணர்ந்துகொள்வதே “படித்தல்” எனப்படும். படித்தலில் சொற்களைக் காணல், உச்சரித்தல், பொருளுணர்தல் ஆகிய மூன்று செயல்கள் ஒருங்கிணைந்து நடைபெறுகிறது. இதற்கு மொழியியல் அறிஞர் ந.சுப்பு ரெட்டியார் **“வரிவடிவத்தில் உள்ள சொற்களை ஒலி வடிவமாக மாற்றி, உச்சரிக்கும் உறுப்புகளும் சொற்களை நோக்கும் கண்களும் ஒத்துழைத்தால்தான் படித்தல் சரியாக நடைபெறும்”** என விளக்கம் அளிக்கிறார்3.

ISSN:2582-9599

**படித்தல் திறன் மேம்பாட்டிற்குச் சாத்தியமான கற்றல் - கற்பித்தல் உத்திகள்**

**1. தமிழ் எழுத்துகளை அடையாளம் காண்பதற்கான செயல்பாட்டு உத்திகள்**

**செயல்பாட்டு உத்தி: 1** படத்தோடு இணைத்தல்

எழுத்துகளையும், சொற்களையும் கற்கத் தொடக்க நிலையில் படத்தோடு அவற்றைத் தொடர்புப்படுத்திப் படிக்கச் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
|  |  |  |
| அம்மா | ஆடு | மயில் |

சான்று:

**செயல்பாட்டு உத்தி: 2** தமிழ் எழுத்துகளின் ஒலி, வரி வடிவத்தை இணைத்தறிதல் மற்றும் துணைக் குறியீடுகள் அறிமுகம்

கால் (அல்லது) துணைக்கால் - **கா**

ஒற்றைக் கொம்பு - **கெ**

இரட்டைக் கொம்பு (அல்லது) கொம்புச் சுழி - **கே**

இணைக் கொம்பு (அல்லது) இணையெழுத்து - **கை**

எழுத்துத் துணை (அல்லது) கொம்புக் கால் - **கௌ**

**தனிக் குறியீடுகள் அறிமுகம்**



**செயல்பாட்டு உத்தி: 3** தொடர்பற்ற எழுத்துகளை நீக்குதல்

ஒரு படம் அளிக்கப்பட்டு அப்படத்தின் கீழ்; படம் சார்ந்த மற்றும் சாராத எழுத்துகளை அளிக்கவேண்டும். பின்னர் படத்திற்குத் தொடர்பற்ற எழுத்துகளை நீக்கச்செய்து படத்தின் பெயரை எழுத்துருக்களுடன் படிக்கச் செய்யவேண்டும்.

சான்று: **சக்கரம்,** **வாத்து** 



**ச, இ, ர, க், எ, க, லை, ம்** **த, வா, ம, க, த், ங, ர, து**

**செயல்பாட்டு உத்தி:4** தமிழ் எழுத்துகள் அறிமுகப் பாடல்கள்

**2. எழுத்துகளைச் சேர்த்துப் படித்தலுக்கான செயல்பாட்டு உத்திகள்**

ISSN:2582-9599

**செயல்பாட்டு உத்தி: 1** எழுத்துருக்களைச் சேர்த்துப் படித்தல்

தமிழ்மொழி ஓர் ஒலியன் மொழியாகும். எனவே எழுத்துருக்களை வேகமாக ஒலித்தாலே அந்தந்த சொல்லுக்குரிய ஒலிப்புமுறை தானாகவே வரும். அதாவது படம் என்பதில் ப, ட என்னும் எழுத்துருக்களின் ஒலிகளைச் சேர்த்துப் படித்து **"பட"** என ஒலித்து அத்துடன் ம் சேர்த்தால் படம் என்னும் ஒலி வடிவம் கிடைக்கும். இவ்வாறு எழுத்துருக்களைச் சேர்த்துப் படித்தலுக்கான பயிற்சியை மாணவர்களுக்கு மீண்டும் மீண்டும் அளிக்கவேண்டும்.

**செயல்பாட்டு உத்தி: 2** படமும் - எழுத்தும் விளையாட்டு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரிக்க வேண்டும். குழுக்களை எதிரெதிராக நிறுத்தவேண்டும். ஒரு குழுவினர் ஒரு படத்தை எடுத்துக்காட்ட மறு குழுவினர் எழுத்தட்டைக் குவியலிலிருந்து எழுத்துக்களைத் தேர்ந்தெடுத்து சரியாக அடுக்கி எழுத்துகளைச் சேர்த்து படித்துக் காட்டவேண்டும். எக்குழு படத்திற்கான எழுத்துகளை அடுக்கி தவறில்லாமல் படிக்கின்றதோ அக்குழுவிற்குப் பரிசு வழங்கலாம்.



சான்று: குழு:1 குழு:2

**செயல்பாட்டு உத்தி: 3** படமும் - சொல்லும் விளையாட்டு

ஆசிரியர் சில படங்களையும், அதைக்குறிக்கும் சொற்களையும் தனித்தனி அட்டைகள் தயாரித்து வைத்துக்கொள்ள வேண்டும். மாணவர்களை இரு குழுவாகப் பிரித்து ஒரு குழுவினருக்குப் படமும் மறு குழுவினருக்குச் சொல்லும் அளிக்கவேண்டும். ஒரு குழுவினர் படத்தைக் காட்ட எதிர்க் குழு அப்படத்திற்கான சொல்லைக்காட்டி எழுத்துருக்களைச் சேர்த்துப் படிக்கவேண்டும். சமவாய்ப்பளித்து அதிக மதிப்பெண் பெறும் குழுவினரைப் பாராட்டலாம்.



சான்று: குழு:1 குழு:2

**செயல்பாட்டு உத்தி: 4** சொல்லைப் பார் - சொல்லைச் சொல் விளையாட்டு

ஆசிரியர் தான் தயாரித்துள்ள சொல் அட்டைகளை வைத்து மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து ஒரு குழுவினர் சொல்லட்டைக் குவியலிலிருந்து ஒரு அட்டையை எடுத்துக்காட்ட வேண்டும். மற்றொரு குழுவினர் அவ்வட்டையிலுள்ள சொல்லின் எழுத்துகளைச் சேர்த்துப் படிக்க வேண்டும்.

சான்று:

**செயல்பாட்டு உத்தி: 5** கண்காண் அளவை வளர்த்தல்

படித்தலின் தொடக்க நிலையில் குழந்தைகள் சொற்களைப் படிக்க ஊக்குவிக்க வேண்டும். பின்னர் ஓரெழுத்துச் சொல், ஈரெழுத்துச் சொல், மூவெழுத்துச் சொல்லென எழுத்துகளின் அளவைக்கூட்டிச் சொற்களை உருவாக்கி அவற்றைக் கரும்பலகையில் எழுதி குழந்தைகளைப்

படிக்கச்செய்ய வேண்டும். இவ்வாறு குழந்தைகளின் கண்காண் அளவை படிப்படியாக வளர்க்கவேண்டும். இதற்கு ஆசிரியர் மாணவர்களுக்குத் தானே கற்றல் செயல்பாடுகள் அளித்து சொற்களை உருவாக்கிப் படிக்;கச் செய்யலாம்.

சான்று: 1-எழுத்து சொல் - ப, 2-எழுத்து சொல் - பல், 3-எழுத்து சொல் - பகல், 4-எழுத்து சொல் - பட்டம், 5-எழுத்து சொல் - பம்பரம், 6-எழுத்து சொல் - பவளமல்லி, 7-எழுத்து சொல் - பள்ளிக்கூடம்.

**3. வரி வடிவத்திற்கேற்ற ஒலி வடிவத்தை அறிவதற்கான செயல்பாட்டு உத்திகள்**

**செயல்பாட்டு உத்தி: 1** குறை சொல் ஒலிப்பு முறையை நீக்குதல்.

மாணவர்கள் சொற்களையும், சொற்றொடர்களையும் சொல்லும்போது ஒலிப்புத் தெளிவின்மை, சொல்லைக் குறைத்து ஒலித்தல் போன்ற குறைபாடுகள் காணப்படுகிறது. இவற்றை நீக்க முறையான வாய்மொழிப் பயிற்சியளித்தும், பின் முறையான எழுத்துருக்களுடன் ஆசிரியர் உரக்கப் படித்தும் மாணவர்களைக் கூறச்செய்வதால் இக்குறைபாட்டை நீக்கலாம்.

சான்று: குரங்கு - கொரங்கு, வாழைப்பழம் - வாயபயம், ஒன்பது - ஒம்போது.

**செயல்பாட்டு உத்தி: 2** மயங்கொலிப் பிழைகளை நீக்குதல்

குழந்தைகளும், பெரியோரும் தமிழிலுள்ள ஒலிகளைச் சரியாக ஒலிக்காது பிறழ ஒலிப்பர். இவ்வாறு ஞ, ண, ன, ந, ல, ள, ழ ஆகிய எழுத்துருக்களின் ஒலிகள் பிறழ்வதனையே மயங்கொலிப் பிழைகள் என்கிறோம். இவ்வாறு குழந்தைகளிடம் காணப்படும் பிழைகளுக்கு முக்கியக் காரணம் போதிய பயிற்சியின்மையே ஆகும். மேலும் தாங்கள் செய்யக் கூடிய தவறுகளை உணராது சரியாக ஒலிப்பதாகவே கருதுகின்றனர். எனவே ஆசிரியர் உரிய செயல்பாடுகள் அளித்து "ஒலி வேறுபட்டால் பொருள் மாறுபடும்" என்பதை அறியச் செய்து பயிற்சியளித்து இக்குறைபாட்டை நீக்கலாம்.

சான்று: பழம் என்பதை பயம் / பலம், வெள்ளம் என்பதை வெல்லம், மணம் என்பதை மனம்

**செயல்பாட்டு உத்தி: 3** நா நெ கிழ் பயிற்சியளித்தல்

ஒரே வகையான ஒலிகள் கொண்ட எழுத்துக்களை அல்லது சொற்களைப் பலமுறை கூறச் செய்தல். இதனால் நாவின் நுனி மேலும், கீழும் அசைந்து அவ்வொலிக்குரிய இடத்தில் அமையுமாறு பயிற்சி அளித்தல். இதன் மூலம் ஒலியை எழுப்பும் முறை திருத்தமடையும். சான்று: லலல லலல லலல, ளளள ளளள ளளள, றறற றறற றறற, ததத ததத ததத, ருருரு ருருரு ருருரு

**செயல்பாட்டு உத்தி: 4** நா பிறழ் பயிற்சியளித்தல்

ஒத்த ஒலியுடைய சொற்கள் அடுத்தடுத்து வருமாறு தொடர்களில் அமைத்து விரைவாகவும், பிழையின்றியும் படிக்கப் பயிற்சியளித்தல். ஒலிப்புத் தவறுகளை நீக்கத் தொடக்க வகுப்பு முதற்கொண்டே பயிற்சியளித்தல் வேண்டும். குழந்தைப் பருவத்திலிருந்தே பழகச் செய்வோமானால் எவ்வொலியும் பழக்கமாகிவிடும்.

சான்று:

பழம் நழுவிப் பாலில் விழுந்தது, பலாப் பழம் பள்ளத்தில் வீழ்ந்தது, ஒடும் நரியினில் ஒரு நரி கிழநரி, எல்லன் குள்ளனைப் பள்ளத்தில் தள்ளினான், அவனும் அவளும் அவலும் தெள்ளுமாவும் தின்றார்கள்,

மேல் ஏழு ஓலை கீழ் ஏழு ஓலை ஆகப் பதினான்கு ஓலை.

**4. குறில் - நெடில் எழுத்து வேறுபாட்டை அறிவதற்கான செயல்பாட்டு உத்திகள்**

**செயல்பாட்டு உத்தி: 1** வடிவ வேறுபாடு - பொருள் வேறுபாடு அறியச்செய்தல்

குறில், நெடில்களைச் சரியாக ஒலிக்காதிருத்தல். மேலும் துணைக்கால், ஒற்றைக் கொம்பு, இரட்டைக் கொம்பு வேறுபாடு தெரியாது ஒலித்தல். இவ்வாறு தவறு ஏற்படுகின்ற இடங்களைக் கண்டறிந்து வடிவ வேறுபாட்டையும், பொருள் வேறுபாட்டையும் மாணவர்களுக்குச் சுட்டிக்காட்டி தவறுகளை ஆசிரியர் திருத்துதல் வேண்டும். மேலும் தொடர் பயிற்சிகள் அளித்து குறில், நெடில் வேறுபாட்டை அறியச்செய்தல்.

சான்று: அப்பம் - ஆப்பம், கரம் - காரம், கொடி – கோடி, முட்டை - மூட்டை.

**செயல்பாட்டு உத்தி: 2** குறில், நெடில் குழு விளையாட்டு

மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்து குழு 1-ஐ குறில் எழுத்தில் தொடங்கும் சொல்லை சொல்லச் செய்தல்;, குழு 2-ஐ அதே சொல்லை நெடில் எழுத்தில் மாற்றிக் கூறச் செய்தல். இவ்வாறு குழு மாற்றி விளையாடவைத்து மதிப்பெண் வழங்கி அதிக மதிப்பெண் பெற்ற குழுவினரை ஊக்குவித்துப் பாராட்டலாம். இத்தகைய விளையாட்டு முறையில் மாணவர்களின் குறைப்பாட்டை நீக்கலாம்.

சான்று: குழு1: கல் - குழு2: கால், குழு1: பல் - குழு2: பால், குழு1: நிலம் - குழு2: நீலம், குழு1: பட்டு - குழு2: பாட்டு

**5. மிகப்பெரிய சொற்களைச் சேர்த்துப் படித்தலுக்கான செயல்பாட்டு உத்திகள்**

**செயல்பாட்டு உத்தி: 1** மிகப்பெரிய சொற்களை இரண்டு அல்லது மூன்று எழுத்துகளாகப் பிரித்துப் படித்தல்

மாணவர்கள் படிக்கும்போது கடினமாகக் கருதும் மிகப் பெரிய சொற்களைச் சிறு சிறு பகுதியாகப் பிரித்துப் படிக்கப் பயிற்சியளித்தல் வேண்டும்.

சான்று: வீட்டுப்பாடம் - வீட் + டுப் + பாடம்,

மீள்பார்வை - மீள் + பார் + வை,

ஆய்வுக்கூட்டம் - ஆய் + வுக் + கூடம்.

**செயல்பாட்டு உத்தி: 2** படிப்பும் இனிக்கும் கற்றல் உபகரணப் பெட்டியைப் பயன்படுத்துதல்

படிப்பும் இனிக்கும் கற்றல் உபகரணப் பெட்டியிலுள்ள படம், படம் + சொல், சொல், சொற்றொடர் மற்றும் சிறு தொடர் அட்டைகளைப் பயன்படுத்துதல். மேலும் மாணவர்களின் நிலைக்கேற்பச் செயல்பாடுகளை அளித்தல் வேண்டும். இவ்வகையில் மாணவர்களின் நிலையறிந்து பயிற்சியளித்து ஆர்வமூட்டுவதால் அவர்களின் படித்தல் திறன் வளர்ந்து, சொற்களஞ்சிய அறிவுவைப் பெருக்கிக்கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும்.




சான்று:

**மான் - புள்ளி மான் - புள்ளி மான் துள்ளி ஓடும் - புள்ளி மான் துள்ளித் துள்ளி ஓடும்.**

**முடிவுரை**

குழந்தைகளின் ஆர்வம், திறமை, மனப்பான்மை, ஆளுமை வளர்ச்சி மற்றும் வாழ்க்கை மதிப்புகள் ஆகியவற்றை உருவாக்கத் தாய்மொழி உதவுகிறது. மேலும் **எல்லோரும் எல்லாவற்றையும் கற்கலாம்; எல்லோர்க்கும் எல்லாமும் இயலும்** என்பதே தற்போதையக் கல்வியின் நோக்கமாகும். இன்றைய கல்வி வளர்ச்சியில் தனியொரு மாணவரைக் குறைகாண்பது தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். அதாவது அனைத்து மாணவர்களும் திறன் பெற்றவர்களே; அவர்கள் பெற்றுள்ள திறன் அளவில் சற்று வேறுபாடு இருக்கலாம். ஆனால் குறைதிறன் பெற்றவர்கள்; ஒரு திறனில் குறைபட்டிருந்தாலும் மற்றொரு திறனில்; மேம்பட்டு விளங்குவதைக் காணமுடிகிறது. எனவே எந்தவொரு மாணவரையும்; திறன் குறைந்தவர் எனக் கூறுவதைத் தவிர்த்து அவர்களின் தமிழ் படித்தல் திறன் மேம்பாட்டிற்குத் துணைநிற்பது ஒவ்வொரு ஆசிரியரின் தலையாய கடமையாகும்.

**சான்றெண் விளக்கம்**

1. அரசு, நீதி நூல்கள், 2005., ப.11

2 .சுப்பிரமணிய பாரதியார், மகாகவி பாரதியார் கவிதைகள், 1998., ப.278

3. தமிழ் கற்பித்தல் - தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், 2007, ப.103

**துணைநூற் பட்டியல்**

1. அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் — திறனறிவோம் - திட்டமிடுவோம் - தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கான பள்ளித் தொகுப்புக் கருத்தாய்வு மைய பயிற்சிக் கையேடு, தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை, 2006 - 2007

2. அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் — படித்தல், எழுதுதல் திறன் வளர்த்தல் பயிற்சிக் கட்டகம் (தொடக்க நிலை), அனைவருக்கும் கல்வி இயக்கம் மற்றும் தமிழ்நாடு மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை, 2014 - 2015.

3. கணபதி, பேராசிரியர் வி., சந்திரிகா இராஜமோகன்., — நற்றமிழ் கற்பிக்கும் முறைகள், சாந்தா பப்ளிஷர்ஸ், இராயப்பேட்டை, சென்னை , 2007, மறு பதிப்பு

4. கோவிந்தராசன், மு., — நற்றமிழ் பயிற்றலின் நோக்கமும் முறையும், சரஸ்வதி பதிப்பகம், சென்னை, 1990, முதல் பதிப்பு

5. தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்கம் — கற்றலில் இனிமை - ஆசிரியர் கையேடு, தமிழ்நாடு தொடக்கக் கல்வி இயக்கம், சென்னை, (யுனிசெப் உதவியுடன் தயாரிக்கப்பட்டது), 2000.

6. தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம் — குறைதீர் கற்பித்தல் பயிற்சிக் கட்டகம் - தொடக்க நிலை வகுப்புகள், தமிழ்நாடு ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை, 2004.

7. வீரப்பன்., டாக்டர் பி. — தொடக்கநிலை தமிழ் கற்பித்தல் புதிய அணுகுமுறைகள், ஜோதிப்பிரியா பதிப்பகம், சென்னை, 2006, முதல் பதிப்பு

**வலைதள வளங்கள்**

1. www.tnscert.org
2. www.thamizham.com
3. www.tamildigitallibrar.in
4. www.projectmadurai.org

**செயலிகள்**

1. Diksha
2. TNTP
3. Nithra - English Dictionary
4. Chutti tamil
5. Learn Tamil easily
6. Learn Tamil (Beta)